**கவனிக்க.-** 2010.04.01 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1649 - 2010 අප්‍රේල් 09 වැනි සිකුරාදා - 2010.04.09

1649 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 470 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 471 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந்திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந்திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி – புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண் பாலாருக்கு விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, வைகாசி மாதம் 07 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, பங்குனி 09.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | முந்தல் | கணமுல்ல பிரதேசத்தின் புத்தளம்பத்து பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

4-203

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, வைகாசி மாதம் 14 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, பங்குனி 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | நுவரகம்பலாத்த மத்திய | நுவரகம் கோரளை வடக்குப் பிரிவில் பிறப்பு இறப்பு மற்றும் நுவரகம்பலாத்த பிரிவில் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

4-359

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**

(சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு)

***சமூகப்பணி இளமாணிப் பட்டக் கற்கைநெறி - 2010***
***சமூகப்பணிக் கல்லூரி***

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது, சமூக சேவைகள் மற்றும் சமூக சேவைகள் நலன்புரி அமைச்சின்கீழ் இயங்குகின்றதும், சமூகப்பணி இளமாணிப் பட்டக் கற்கைநெறியை வழங்குகின்றதுமான ஓர் நிறுவனம் ஆகும். இக்கற்கை நெறியானது ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுகின்றது.

இந்நிறுவனமானது, 1978 ஆம் ஆண்டின் 25ஏ, 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் பட்டச் சான்றிதழ் வழங்கும் ஒரு நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கைநெறிக்கு, 2009 ஆம் ஆண்டின் க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் Z வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் பல்கலைக் கழகத்துக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடைய, சமூகப்பணி இளமாணிக் கற்கைநெறியை தொடர விரும்புகின்றவர்களிடம் இருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

**ஏன் நீங்கள் இக்கற்கை நெறியை தெரிவுசெய்ய வேண்டும் ? :**

சமூகப்பணித் தொழில்வாண்மையாளர்களுக்கு உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும், பாரிய கேள்வி காணப்படுவதுடன் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் துறைகளில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் தொழில் வாய்ப்புக்கள் பல காணப்படுவதுமாகும்.

**ஏன் நீங்கள் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தை தெரிவுசெய்ய வேண்டும் ? :**

சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அரச உயர் கல்வி நிறுவனமாக அனுமதிக்கப்பட்டதாகும். சமூகப்பணித் தொழில்வாண்மை கல்விக்காக இலங்கையில் நிறுவப்பட்டுள்ள ஒரேயொரு அனுமதிக்கப்பட்ட நிறுவனமும் இதுவேயாகும்.

**இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் முறை**.- கீழே குறிப்பிட்ட மாதிரியின் அடிப்படையில் ஆங்கில மொழியில் சுயமாகத் தயாரிக்கப் பட்ட விண்ணப்பமானது,-

"பதிவாளர்",
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
இல. 488ஏ, நாவல வீதி,
ராஜகிரிய.

எனும் விலாசத்திற்கு 2010.04.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். அத்துடன் ராஜகிரிய தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு "பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்" என்ற பெயருக்கு பெறப்பட்ட ரூபா 400 பெறுமதியான காசுக்கட்டளையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிஎஸ்டபிள்யூ-2010" எனக் குறிப்பிடவும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2882506-11, 011-32119597 எனும் இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்
(SPECIMEN APPLICATION FORM)

**Application for the Bachelor of Social Work**
*Degree Programme - 2010*

1. Full Name :————.
2. Name with Initials :————.
(in Capital Letters)
3. National Identity Card Number :————.
4. Permanent Address :————.
5. Contact Tel. No. :————.
6. Educational Qualifications :

(i) GCE (O/L) :–
Index No. :———, Year :———, Results :———.
(ii) GCE (A/L 2009) :
Index No. :———, Z Score :———, Results :———.
District :———.
(iii) Highest Qualification/Examination in English (if any) :-

*Copies of the results sheets of the GCE (O/L) and GCE (A/L) examinations should be forwarded along with the application.

I certify that the information furnished by me is true and accurate. I am aware that my studentship can be cancelled, even after the selections, if the particulars are found to be incorrect.

————,
Signature.

Date :———.

பதிவாளர்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

2010.03.20.

4-265/1

---

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**
(சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு)

**சமூகப்பணி இளமாணிப் பட்டக் கற்கைநெறி - 2010**

(சமூகப்பணி டிப்ளோமாதாரிகளிடமிருந்து இரண்டாம் ஆண்டிற்கான விண்ணப்பம் கோரல்)

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது, சமூகப்பணி டிப்ளோமா பெற்ற மாணவர்களிடம் இருந்து சமூகப் பணியில் இளமாணிக் கற்கையில் இரண்டாம் வருட அனுமதிக்காக விண்ணப்பங்களைக் கோருகின்றது.

**விண்ணப்பிப்பதற்கான தகைமை :**

(1) விண்ணப்பதாரி இலங்கை சமூகப்பணிக் கல்லூரி/தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திலிருந்து சமூகப்பணியில் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

(2) ஆங்கிலத்தில் நடத்தப்படும் இப்பாடநெறியைப் பின்பற்ற ஆங்கிலத்தில் உயர் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(3) மூன்று வருடங்களுக்கு முழுநேரமாகப் இப்பாடநெறியைப் பின்பற்றக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது ? :**

முழுப்பெயர், முகவரி, மாவட்டம், தொலைபேசி இலக்கம், கல்வித் தகைமை (டிப்ளோமா பெற்ற வருடத்தை குறிப்பிடவும்.) ஆங்கில மொழியில் பெற்ற உயர் தகைமை போன்ற விடயங்கள் உள்ளடங்கலாக ஆங்கில மொழி மூலம் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையை "பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இல. 488ஏ, நாவல வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு 30.04.2010 ஆந் திகதிக்கு

முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் மேல் வலது மூலையில் ''சமூகப்பணி இளமாணி இரண்டாம் வருடத்திற்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடவும்.

மேற்குறிப்பிட்ட கற்கைநெறிக்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் மட்டுமே தெரிவுசெய்யப்படுவர். ரூபா 400 பெறுமதியான காசுக்கட்டளையை பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு ராஜகிரிய தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் : 011-2882506-11/011-32119597.

பதிவாளர்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

2010.03.20.

4-265/2

---

### இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் இரண்டாம் மொழி பற்றிய பரீட்சையும் - 2010

மேலே குறிப்பிடப்பட்ட சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சையும் இரண்டாம் மொழி பற்றிய பரீட்சையும் 2010, யூலை மாதம் கொழும்பில் நடைபெறும்.

2. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக் கூடியவாறு கால அட்டவணை தயாரிக்கப்படும்.

3. **பாடத்திட்டம்** :

| சேவை | வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் | வர்த்தமானிப் பத்திரிகையின் இலக்கமும் திகதியும் | விடயங்களுக் குரிய பின்னிணைப்பு |
|---|---|---|---|
| இலங்கை கணக்காளர் சேவை | I ஆம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை | 1194/26 2001.07.27 | 'ஆ' |
| | II ஆம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை | 1194/26 2001.07.27 | 'இ' |
| | இரண்டாம் மொழிப் பரீட்சை | 1194/26 2001.07.27 | 'உ' |

வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை விடயங்களுக்கு ஒரே முறையில் அல்லது வெவ்வேறாக சில தவணைகளில் தோற்றுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அனுமதியுண்டு. எவ்வாறாயினும் நியமிக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்திபெறல் அத்தியாவசியமானதாகும்.

இரண்டாம் மொழி பற்றிய பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களுக்கான வாய்மொழிப் பரீட்சைகள் ஒரு நிலையத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4. (அ) இலங்கை கணக்காளர் சேவையின் வினைத்திறமைகாண் பரீட்சைக்கான பாடங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன :

**இலங்கை கணக்காளர் சேவை**

*முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை*

| பாட இல. | பாடம் | கால வரையறை மணித்தியாலம் |
|---|---|---|
| 30 | அரசாங்க நிதி நடைமுறைகள் | 3 |
| 31 | சட்டம் மற்றும் முகாமைத்துவம் | 3 |
| 32 | நிர்வாகம் | 3 |
| 33 | அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல்கள் சமர்ப்பித்தல் | 3 |

*இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை*

| பாட இல. | பாடம் | கால வரையறை மணித்தியாலம் |
|---|---|---|
| 36 | முகாமைத்துவ கணக்கியல் | 3 |
| 37 | பொது நிதி முகாமைத்துவம் | 3 |
| 38 | முகாமைத்துவ மற்றும் அமைப்புகள் | 3 |

*இரண்டாம் மொழிப் பரீட்சை*

| | | |
|---|---|---|
| 09 | சிங்களம் (எழுத்து மூலம்) | 2 |
| 10 | தமிழ் (எழுத்து மூலம்) | 2 |
| 11 | ஆங்கிலம் (எழுத்து மூலம்) | 2 |
| 12 | சிங்களம் (வாய்மொழி) | |
| 13 | தமிழ் (வாய்மொழி) | |
| 14 | ஆங்கிலம் (வாய்மொழி) | |

4. (ஆ) பரீட்சையின் பெயர்கள் :

| சேவை | பரீட்சையின் பெயர் |
|---|---|
| இலங்கை கணக்காளர் சேவை | முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 01 |
| இலங்கை கணக்காளர் சேவை | இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 02 |
| இலங்கை கணக்காளர் சேவை | இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 03 |

5. **வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளில் சித்திபெறவேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விலக்களித்தல் :**

| இலங்கை கணக்காளர் சேவை | பாடம் | விலக்களிப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகள் |
|---|---|---|
| இரண்டாம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சை | 36-முகாமைத்துவ கணக்கியல்<br>37-பொது நிதி முகாமைத்துவம்<br>38-முகாமைத்துவ மும் அமைப்பும் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் நடாத்தப்படும் அரச நிதி முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா<br>அல்லது<br>தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தினால் நடாத்தப்படும் கணனி அமைப்புகள் திட்டம் பற்றிய உயர் டிப்ளோமா<br>அல்லது<br>கணக்கியல், வர்த்தகவியல், முகாமைத்துவம், பொது நிருவாகம், தொழில் முயற்சிகள் நிர்வாகம், கணனி விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பெற்றுக்கொண்ட பட்டப்பின் படிப்பு டிப்ளோமா/முதுமாணி/கலாநிதி (பிஎச்.டி.) பட்டம்<br>அல்லது<br>பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகம், பட்டயம் பெற்ற முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம், சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர்களின் பட்டயம் பெற்ற சங்கம், பிரித்தானிய கணனிச் சங்கம், அவுஸ்திரேலிய கணனிச் சங்கம் ஆகிய இவற்றுள் ஒன்றின் இறுதிப் பரீட்சை<br>அல்லது<br>சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய எந்தவொரு சம மட்டத்திலான தகைமைகள் |

6. மொழி விடயங்களுக்குரிய கேள்விப்பத்திரங்கள் தவிர்ந்ததாக ஏனைய சகல விடயங்களுக்கும் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் விடையளிப்பதற்கு விண்ணப்பதாரர்களுக்கு இயலக்கூடிய வகையில் தேவையான ஏற்பாடுகளை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஏற்பாடு செய்யப்படும்.

7. யாரேனும் விண்ணப்பதாரர் தமக்கு உரித்துடையதல்லாத மொழியொன்றின் மூலம் தோற்றியுள்ளார் எனப் பின்னர் தெரியவருமிடத்து அவரது/அவளது பரீட்சார்த்திக்கான உரித்து நிராகரிக்கப்படும். விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

8. விண்ணப்பம் தயாரிக்கப்படும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப்படல் வேண்டும்.

9. விண்ணப்பங்கள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் 1-7 ஆம் இலக்கம் வரை தகவல்கள் முதலாம் பக்கத்தில் வரும் விதத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் தங்கள் கையெழுத்தினால் தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பங்களுக்கு அமையாத விண்ணப்பங்கள் மற்றும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும். அனுமதி அட்டைகள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்று தங்களிடம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாக இருக்கும்.

10. விண்ணப்பப்படிவங்கள் 2010, மே 7 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக திணைக்களத் தலைவர்கள் ஊடாக பதிவுசெய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். உரிய திகதிக்கப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

11. விண்ணப்பதாரிக்கு பிரவேசப்பத்திரம் அனுப்பி வைக்கப்படுவதுடன் அதுபற்றி குறிப்பிடப்பட்டு பத்திரிகைகளில் அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் மூலம் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழிந்த பின்னரும் பிரவேசப்பத்திரம் கிடைக்கப்பெறாவிடில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் சான்றுப்படுத்தப்பட்ட போட்டோ பிரதியொன்றும் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு அப்பால் உள்ள பிரதேசம் ஒன்றெனின் பிரவேசப்பத்திரத்தை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கம் ஒன்றையும் விசாரணைக் கடிதம் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

12. மேலே (10) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை வழங்குவதற்கு இயலாத விண்ணப்பதாரிகளினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

13. அடையாள அட்டைகள் சமர்ப்பித்தல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள 1971, யூன் மாதம் 29 ஆந் திகதிய இலக்கம் எஸ்ஈ 274 ஐக் கொண்ட சுற்றறிக்கை மீது சகல விண்ணப்பதாரிகளினதும் கவனம் ஈர்க்கப்படுகின்றது. பரீட்சை மண்டபத்தில் கீழ்க்காணும் அடையாள அட்டைகள் மூலம் மட்டும் தங்களது அடையாளம் பற்றிய சான்றுகளை சமர்ப்பித்தல் விண்ணப்பதாரிகளின் பொறுப்பாகும் :-

(i) தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

இதற்கு மேலதிகமாக பரீட்சை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்படுதல் வேண்டும்.

14. பரீட்சைக் கட்டணங்கள் கீழே தரப்பட்டுள்ளன :-

(அ) முதலாவது முறை (முழுமையான பரீட்சை அல்லது பகுதி).- இற்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.
(ஆ) அதன் பின்னர் ஒவ்வொரு முறைக்கும் :

| | ரூபா ச. |
|---|---|
| பரீட்சை முழுவதற்கும் அல்லது பகுதிக்கு | 115.00 |
| ஒரு பாடத்திற்கு | 75.00 |
| (வாய்மொழிப் பரீட்சையும் ஒரு பாடமாகக் கணிக்கவும்.) | 75.00 |

விண்ணப்பதாரிகளினால் கைச்சாத்திடப்பட்டு உரிய முறையில் செல்லுபடியற்றதாக்கப்பட்ட அரசிறை முத்திரைகள் மூலம் கட்டணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உதய ரஞ்சித் செனவிரட்ன,
திறைசேரி பிரதிச் செயலாளர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2010, மாச்சு மாதம் 26.

**இலங்கை கணக்காளர் சேவை**

*பின்னிணைப்பு 'ஆ'*

**இலங்கை கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை :**

(அ) முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை கீழ்க்காணும் விடயங்களைக் கொண்ட மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட நான்கு வினாத்தாள்களை கொண்டதாகும் :-

* அரசாங்க நிதி நடைமுறைகள்
* சட்டமும் முகாமைத்துவமும்
* நிருவாகம்
* அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைக்கு தகவல்கள் சமர்ப்பித்தல் :

(ஆ) முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் பாடங்களுக்கு ஒரே முறையில் அல்லது அலுவலர் விரும்பினால் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

(இ) பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**பாடத்திட்டம்**

*1. **பாட இலக்கம் 30- அரசாங்க நிதி நடைமுறைகள்.**- அரச கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதிப்பிரமாணங்கள் மற்றும் திறைசேரிச் சுற்றறிக்கைகள் பயன்படுத்தப்பட்டு வருமானத்திற்கான இணைப்பின் பிரகாரம் நிதிப்பிரமாணங்கள்/நடைமுறைகள், செலவினங்கள், வெளிநாட்டு உதவி, வருடாந்த மற்றும் மேலதிக மதிப்பீடு, பொதுப்படுகடன், கேள்விகள், கட்டுநிதிகளும் முற்பணங்களும், நிதி அங்கீகாரம், நாட்டின் கணக்குகள், தொழிற்பாடுகள் மற்றும் பொருளாதார வகைப்படுத்தல்கள், நிகழ்ச்சித்திட்ட மற்றும் செயலாற்றுகை பாதீடு, நிதி அமைச்சரின் செயற்பாடுகள், பொதுத் திறைசேரி, கொள்கை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சு, செயலாளர்கள், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் பொதுக்கணக்குக் குழு தொடர்பான நிதிப்பிரமாணங்கள் மற்றும் திறைசேரிச் சுற்றறிக்கைகள் என்பவற்றின் பிரயோகம் சம்பந்தமாக பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவு சோதிக்கப்படும்.*

*2. **பாட இலக்கம் 31-** சட்டமும் முகாமையும் :*

*சட்டம் :*

*சட்டத்தின் வரைவிலக்கணம்*
*இலங்கையின் சட்ட முறைமைகள்*
*இலங்கையின் நீதிமன்ற முறைமைகள்*
*ஒப்பந்தச் சட்டம்*
*முகவராண்மைச் சட்டம்*
*பொருள் விற்பனை*
*தவணைக் கொள்வனவு முறைமைகள்*
*கைமாற்றத்தகு சாதனங்கள்*
*பிணைகள் தொடர்பான உத்தரவாதம்*
*காப்புறுதி*

*முகாமை :*

*முகாமைக்கான அறிமுகம்*
*முகாமையாளர்களது பணிகளும் தேர்ச்சிகளும்*
*திட்டமிடல் செய்முறையும் ஒழுங்கமைப்பு முறை மட்டங்கள் அமைத்தலும்*
*நிறுவனக் கட்டமைப்பு*
*மனித வளங்கள்*
*செயலாற்றுகை மதிப்பீடு*
*மேம்படுத்தல்*
*ஊக்குவித்தல்*
*தலைமைத்துவம்*
*தொடர்பாடல்*
*தீர்மானம் எடுத்தல்*
*பிரச்சினைகளைத் தீர்த்தல்*
*முரண்பாடுகளை முகாமித்தல்*
*நேர முகாமைத்துவம்*
*தரவட்டங்களும் உற்பத்தித் திறனும்*
*ஒழுக்கவியல் முகாமையும் பொறுப்பும்*

*3. **பாட இலக்கம் 32.**- நிருவாகம்.-*

*தாபன விதிக்கோவையின் பகுதி I, பகுதி II களில் உள்ள ஏற்பாடுகள் தொடர்பான பரீட்சார்த்திகள் அறிவு சோதிக்கப்படும்.*

*4. **பாட இலக்கம் 33.- அறிக்கை எழுதுதலும் முகாமைக்கு தகவல் வழங்கலும்** :*

முகாமைத் தகவல் தொடர்பில் உரிய காலத்தில் செய்தல், சரியாகச் செய்தல், பூரணமாகச் செய்தல், தொடர்பு ஆகியவற்றின் முக்கியத்துவம்
தொடர்பும் தகவல்களை கையாளுதலும்
கலாந்தர, நிமித்த காரண அறிக்கைகள்
கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புக்கள், அறிக்கை எழுதுதல்
முகாமை அறிக்கைகளின் கட்டமைப்பு
வெளிப்படுத்தவேண்டிய முக்கிய பெறுபேறுகள்
பெறுபேறுகளுக்கு பொருள்கோடல்
வேறுபாடுகளுக்கான யோசனைகள்
தரவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் புள்ளிவிபர முறைகளின் உபயோகம்
செயலாற்றுகை ஒப்பிடுகை
முகாமை அறிக்கைகளில் விகிதங்கள், நூற்றுவீதங்களின் உபயோகம்
விளக்க வரைபடம் மூலம் விளக்கவுரை
தொழில்சார் சொற்பொழிவுகளையும் விரிவுரைகளையும் செவிமடுத்தல்
விரிவுரைகளை வாய்மொழி மூலமாக அறிக்கையிடல்
குழுமக் கலந்துரையாடல்கள்
கருத்தரங்குத் திறமைகள்
உரை நிகழ்த்துதல்

*பின்னிணைப்பு 'இ'*

*(ஆ) இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-*

* முகாமைத்துவக் கணக்கியல்
* பொது நிதி முகாமை
* முகாமையும் அமைப்பும்

*அலுவலர்கள் விரும்பினால் இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கு பாடங்களுக்கு ஒரே தடவையில் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

***பாடத்திட்டம்***

*1. **பாட இலக்கம் 36**- முகாமைக் கணக்கியல்.- 3 மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள்*

*பாடத்திட்டம்.- கணக்கீட்டு பின்னூட்டி பற்றிய கட்டுப்பாட்டுக் கோட்பாடு வரையறையுள்ள மற்றும் வரையறையற்ற ஒழுங்குகள், நியமக் கிரயங்களின் வகைகள், செயல் நிறைவேற்று நிர்மாணங்களையும் பெறுமதி நிர்மாணங்களையும் ஆக்குவதன் கோட்பாடும் நடைமுறையும், தரங்களை மீளாயுதல், கற்றல் வளைவினை தூண்டல் என்பவற்றின் ஆய்வு, முரண்களையும் உப முரண்களையும் பகுத்தாய்தல், அவற்றின் உபபொருள், அவற்றால் குறிப்பிடப்படுபவை, அவற்றின் ஆய்வு, கட்டுப்பாட்டுக் கணக்கீட்டு சார்ந்த தொழிற்படு வகைகள், பணக்கூறுகள், பாதீட்டு எண்ணக்கரு, பாதீட்டுக் கட்டுப்பாட்டு நிர்வாகம், பாதீட்டுக் கைநூல், நிலையான மற்றும் நெகிழ்தகு பாதீடு, பிரதான மற்றும் குறைநிரப்பு பாதீடு, பாதீட்டு நிலையங்கள், பாதீட்டினைத் தயாரிப்பதில் முகாமையின் பங்குபற்றல், பங்குபற்றலும் ஊக்குவித்தலும், பாதீட்டுக்காலமும் முக்கிய பாதீட்டுக் காரணிகளை இனங்காணலும்.*

*2. **பாட இலக்கம் 37**- அரசாங்க நிதி முகாமை – அரசாங்க நிதி முகாமை 3 மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள் வினாக்களை தெரிவுசெய்ய இடமளிக்கப்பட மாட்டாது.*

*அரசாங்க கணக்காளரின் வகிபாகம்.- அரசாங்க நிதி பற்றிய அரசியல் அமைப்பு, சட்ட அமைப்பு, நிறுவனச் சட்டகம், மத்திய அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், உள்ளூராட்சி நிறுவனங்கள், கூட்டுறவு இயக்கம் போன்றவை.*

*பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு, பொதுத் திறைசேரியின் செயற்பாடுகள், திட்ட அமுலாக்கல் அமைச்சு, மதிப்பீட்டுச் செயற்குழு, கணக்காய்வாளர் நாயகம், பொது கணக்குக் குழு, திரட்டிய நிதியம், பாராளுமன்றத்தின் கட்டுப்பாடுகளாலுள்ள பிரச்சினைகள்.*

*நிதிச் சுற்றுவட்டம், திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், நிகழ்ச்சித்திட்ட பாதீடு, நிதி அங்கீகாரம், அறிக்கையிடல், கணக்கீடுகளின் மீளாய்வும் கணக்காய்வும், கருத்திட்டங்களை மதிப்பாய்வு செய்தல், நிழல் விலைகள் மற்றும் புள்ளிவிபரத் தரவுகள் பாவனை, கணக்கீடுகள் மற்றும் எதிர்பார்த்த பெறுமதியைத் தீர்மானித்தல், செலவுப்பயன் பகுப்பாய்வு, கழிவிட்ட காசுப்பாய்ச்சல், உள்ளக விளைவு வீதம், கருத்திட்டங்களை நிலைப்படுத்தல், கருத்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் பற்றிய பொருளாதார, நிதி முகாமைத்துவ பிரிவுகள், பயனுறுதியான கருத்திட்டங்கள் சமர்ப்பித்தல்.*

*நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் நுட்பங்கள், வலைப்பின்னல் பகுப்பாய்வு முறைமைகளின் பிரயோகம், வழங்களை ஒதுக்குதல், போக்குவரத்து பற்றிய பிரச்சினைகள், பாவிப்பதால் அல்லது காலக்கிரமத்தால் தேய்வுறும் சொத்துக்கள் மற்றும் அவ்வாறு தேய்வுறாது எனினும் ஒரு காலத்துக்குப் பாவிப்பதால் அசையாச் சொத்துக்களை மீள் பிரதியிடல், செயலாற்றுகைப் பாதீடு அடிப்படை முறைகளை உருவாக்குதலும் பாவனையும், செயலாற்றுகை அளவீடு, அளவிடல் வகைகள், அலகுகள், அளவிடல் முறைமைகளும் செயலாற்றுகைப் பகுப்பாய்வும்.*

*செயலாற்றுகைப் பாதீடு, நிகழ்ச்சித்திட்ட கட்டமைப்பு, தொழிற்பாடுகளை வகைப்படுத்தல், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள், செலவு கருத்திட்டங்கள் மற்றும் செலவு விடயங்கள் பொருளாதார செயற்பாடுகளை வகைப்படுத்தல்.*

*நிதிக் கட்டுப்பாட்டு முறைகள், கணக்களி தகைமை, உள்ளக கட்டுப்பாடு மற்றும் நிதிப்பிரமாணங்கள், உள்ளக கணக்காய்வு, வினைத்திறன் கணக்காய்வு, முகாமைக் கணக்காய்வு, வேறுபாடுகளின் பகுப்பாய்வு, மூலதனப் பாதீடு தயாரித்தல் பற்றிய தீர்மானம் எடுத்தல், நீண்டகாலத் திட்டமிடலும் அதன் முக்கியத்துவமும், எதிர்வுகூறல், சரியாந்தன்மையும் எல்லைகளும், அபாயப் பகுப்பாய்வு, தீர்மான விருட்சங்கள், நிகழ்தகவு காரணிகள்.*

*மூலதனத்திற்கான கேள்வி.- மூலதன உற்பத்தியும் ஊதியத்தை மதிப்பிடுவதில் ஏற்படும் பிரச்சினைகளும் கருத்திட்ட முன்னுரிமைப்படுத்தும் பிரமாணத்தின் நிதானமின்மைக்காக இடமளித்தல், மீளக் கொடுப்பனவு மீதான ஒப்பளவு விகிதத்தை கணிப்பீடு செய்தல், நிகழ்கால தேறிய பெறுமதி மற்றும் கழிவிடப்பட்ட நிதிப்பாய்ச்சலின் நன்மைகள், வரிகள் மீதான செயல் விளைவு, முதலீட்டு ஊக்குவிப்பு, கருத்திட்ட செலவுக்கட்டுப்பாடு, இறுதிக் கணக்காய்வு.*

*உட்பிரமாணத் தீர்மானங்கள்.- உற்பத்திக் கலவை, உற்பத்தி செய்தல் அல்லது கொள்வனவு செய்தல் தொடர்பான தீர்மானம், உற்பத்தி முறைகளின் மாற்றுத்திட்டம், தொழிற்சாலையின் பிரச்சினைகளும் தீர்வும், விலைக்கொள்கை, பங்களிப்புக் கோட்பாடு, நுகர்வோர் கேள்வியில் செயல் விளைவுகள், கேள்வி நெகிழ்ச்சி, சந்தைப்படுத்தல் உபாயங்கள், செயலாற்றுகைப் பகுப்பாய்வின் நுட்பங்கள், இலாபகரத் தன்மையினை அளவிடுதலும் விகிதங்களும்.*

*ஈடுபடுத்திய மூலதன விளைவு, மூலதனக் கட்டமைப்பு, திணைக்களங்களுக்கிடையிலான செயலாற்றுகைகளை ஒப்பிடலுக்கான பிரமாணங்கள், செலவு நன்மைப் பகுப்பாய்வு, தொழிற்படுமூலதனத்தின் முகாமை, அரச வர்த்தக நிறுவனங்களின் நிதி முகாமை, பாதீட்டுத் தயாரிப்பு, முகாமை அறிக்கை, கணக்குகளை ஆராய்தலும் நிதி விகிதங்களின் பிரயோகமும், பொது வர்த்தக நிறுவனங்களின் விலையிடல், கணக்குகள் வடிவமும் உள்ளடக்கமும், அரசாங்க அறிக்கைகள் மற்றும் அரச வர்த்தகமும்.*

***3. பாட இலக்கம் 38- முகாமையும் அமைப்பும்**- 3 மணித்தியால வினாத்தாள்.- பரீட்சார்த்தி முகாமையும் அமைப்பும் பற்றிய தத்துவங்களை எங்ஙனம் புரிந்துகொண்டிருக்கிறார் என்பதையும், நவீன முகாமைத்துவ திட்ட நுட்பங்களுடன் அவருக்கிருக்கும் அறிவினை எடைபோடும் பாங்கிலேயே இப்பாடத்திற்கான வினாக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.*

*பின்னிணைப்பு 'உ'*

***சிங்களம்***

*சிங்களம் எனும் பாடம் எழுத்துமூல விடையளித்தலுக்கான ஒரு பகுதியையும் வாய்மொழிமூல விடையளித்தலுக்கான ஒரு பகுதியையும் கொண்டிருக்கும். எழுத்துமூல விடையளித்தலுக்கான வினாத்தாள் 2 மணித்தியாலங்களைக் கொண்ட பின்வருவனவற்றில் வினாக்களைக் கொண்டதாகும் :*

(1) இலக்கணம்
(2) தலைமைக்காரர் அல்லது கிராமசேவை உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றவையும் பல்வேறு தொடர் கையெழுத்தில் எழுதப்பட்டவையுமான மனுக்களை அல்லது அறிக்கைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்
(3) ஆங்கிலத்திலுள்ள ஓர் அரச கருமப் பத்திரத்தை அல்லது சாசனத்தை சிங்களத்தில் மொழி பெயர்த்தல்.

வாய்மொழித் தேர்வு பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும் :-

(1) ஆங்கிலத்திலுள்ள ஓர் அரசகரும பத்திரத்தை ஓர் சிங்கள ஆள் அப்பந்தியை விளக்கி எழுத்தில் எழுதிக்கொள்ளுமுகமாக சிங்களத்தில் வாசித்தல்
(2) சிங்களத்தில் உள்ள மனுவை வாசித்தல்
(3) *உரையாடலும் மொழிபெயர்ப்பும்.*- பல்வேறு வகுப்பினரின் சிங்களத்தை விளங்கிக் கொள்வதற்குப் பரீட்சார்த்திகளுக்குள்ள ஆற்றலையும் சாதாரண உரையாடலிலுள்ள வழமையான அரசகரும அலுவலிலும் தனது கருத்துக்களை தெரிவிக்கவுள்ள ஆற்றலையும் அளவிடுவதே இப்பரீட்சையின் நோக்கமாகும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்காக பாடத்தில் 40% மொத்த புள்ளிகளைப் பெறவேண்டும்.

**தமிழ்**

தமிழ் எனும் பாடம் எழுத்துமூல விடையளித்தலுக்கான ஒரு பகுதியையும் வாய்மொழிமூல விடையளித்தலுக்கான ஒரு பகுதியையும் கொண்டிருக்கும். எழுத்துமூல விடையளித்தலுக்கான வினாத்தாள் 2 மணித்தியாலங்களைக் கொண்ட பின்வருவனவற்றில் வினாக்களைக் கொண்டதாகும் :-

(1) இலக்கணம்
(2) தலைமைக்காரர் அல்லது கிராமசேவை உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றவையும் பல்வேறு தொடர் கையெழுத்தில் எழுதப்பட்டவையுமான மனுக்களை அல்லது அறிக்கைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்
(3) ஆங்கிலத்திலுள்ள ஓர் அரச கரும பத்திரத்தை அல்லது சாசனத்தை தமிழில் மொழி பெயர்த்தல்

வாய்மொழித் தேர்வு பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும் :-

(1) ஆங்கிலத்திலுள்ள ஓர் அரச கருமப்பத்திரத்தை ஒரு தமிழ் ஆள் அப்பந்தியை விளக்கி எழுத்தில் எழுதிக் கொள்ளுமுகமாக தமிழில் வாசித்தல்
(2) தமிழிலுள்ள மனுவை வாசித்தல்
(3) உரையாடலும் மொழிபெயர்ப்பும்.- பல்வேறு வகுப்பினரின் தமிழை விளங்கிக் கொள்வதற்குப் பரீட்சார்த்திகளுக்குள்ள ஆற்றலையும் சாதாரண உடையாடலிலுள்ள வழமையான அரசகரும அலுவலிலும் தனது கருத்துக்களை தெரிவிக்கவுள்ள ஆற்றலையும் அளவிடுவதே இப்பரீட்சையின் நோக்கமாகும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்காக பாடத்தில் 40% மொத்தப் புள்ளிகளைப் பெறவேண்டும்.

**ஆங்கிலம்**

பரீட்சார்த்திகளின் தகவலிற்காக வினாத்தாளின் மாதிரி வடிவமொன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது :-

Part A

(a) Fill in the blanks with the correct form of the verb given within brackets :-

During the last war our country...............................1(be) a British Colony..................... 2 (take) a full part in the war effort. Consequently out tea, rubber and coconut........................... 3 (ship) to Britain at very favourable prices and the foreign exchange we..................... 4 (earn).............................5 (accumulate) as assets. Again during the Korean war in the early fifties our products............ 6 (fetch) good prices and we.................. 7 (not have) any exchange problem. However,political independence....................... 8 (not given rise) to any effort to.......................9(build up) our economy we..................... 10(be) a nation of consumers goods which....... (11) (squander) our foreign exchange on consumer goods which.............12 (can produce) locally and incidentally diversified our economy. Over the last decade we........................... 13 (begin) to feel the pinch when our primary products.............. 14(fail) to command good prices in the world market while our requirments of food both rice and subsidiary food shifts...........15(rise) in place.

(b) Fill in the blanks with the correct preposition (where necessary) :-

As Assistant Secretary....................... 16 charge........................ 17 subjects, it was my duty to convene groups of officers dealing................... 18 different aspects of development work in the Ministry................. 19 time to time. They discussed.................... 20 various problems that they confronted and which they could not cope......................... 21 on their own. We were thus able to share our experience............... 22 each other and make concrete proposals.................... 23 the Secretary every month. He in turn put................................ 24 his own plans for discussion......................... 25 these meetings.

(c) Underline the correct letters given within brackets that would complete the spelling of the following words :-

26. har......... ment(rass/as/ass).
27. ember.............(rass/as/ass)
28. tol.................(arreance/erance/erence)
29. par....................arian(liament/limen/liment)
30. bal......................ing(let/lat/lot)
31. Itin....................... (erary/array/erarie)
32. pers.................. (everance/everence/ewerence.)
33. bour........................ (geoise/joursie/juwarsy)
34. prolet..................(ariet/ariat/eariyat).
35. com...................... ate(memorr/emor/memor).

(d) In each of the following statements underline the correct word within brackets :-

36. The inventory was checked by the Board of (Surveillance/Survey/Surveyors).
37. At the enquiry I had to be satisfied that the accused officer has (contradicted/contravened/contaminated) the regulations.
38. Every receipt should have a (counterfoil/counterfeit/counterpane) for the purpose of audit.
39. There was a possibility that the prosecution had (fabricated/fumigated/promulgate) the eveidence.
40. (Discrete/Discretionary/Discriminatory) power was given to the Head of the Department under the relevant Act.
41. The police party had (laid/lied/lain) in ambush until the bribe taker arrived.
42. The entire staff turned upon(facilitate/inflirate/felicitate) the watcher on his retirement.
43. In times of national crisis we must avoid(luxuriant/luxurious) habits.
44. Martial music was played over the radio during height of the battle to keep up the (moral/morale/morals) of the people.
45. Candidates are advised to use(Stationary/Stationery) sparingly awing to the acute paper shortage.

(e) Underline the correct phrase in the brackets that means the same as the word or phrase underlined in each sentence :-

46. In good management the boss should, support his staff in their work (back out/back up/back away).
47. The sales and replacement of stock amounted to over Rs.5,000 (turn out/turn up/turn away).
48. We were warned at the start not to let out work get into arrears (set out/out set).
49. The younger son wasted his father's wealth in a few years (ran over/ran through).
50. I wanted to see the film, but the queue deterred me from going (put away/put off).

**Part B**

Read the following passage carefully and then answer the questions set out below :-

Most modern political ideals such, for example, as justice, liberty, constitutional government, and respect for the law or at least the definitions of them, began with the reflection of Greek thinkers upon the institutions of City State, But in the long history of political thought the meaning of such terms has been variously modified and always that meaning has to be understood in the light of the institutions by which the indicates were to be realized and of the society in which those institutions did their work. The Greek City States was so different from the political communities in which modern men live that it requires no small effort of the imagination to picture its social and political life. The Greek Philosophers were thinking of political practices far different from any that have prevailed commonly in modern word, and the whole climate of opinion in which the work was done was different. Their problems though not without their analogies in the preset, were never identical with modern problems and the ethical apparatus by which political life was evaluated and criticized varied widely from any that now prevails. In order to understand at all accurately what their theories meant it necessary first to realize at least roughly what kind of institutions they had in view and what citizenship connected as an effect and as an ideal, to the public for whom they wrote. For this purpose the Government of Athens is especially important, partly because, it is the best known, but chiefly because it was an object of special concern to the greatest of Greek Philosophers.

As compared with modern states the ancient City-State was exceedingly small both in area and in population. The numbers were exceedingly uncertain but, a figure somewhat in excess of three hundred thousand would be approximately correct. Such an arrangement of a small territory denominated by a single City was typical off the City State.

In each of the following cases, choose the alternative which in your opinion supports the views expressed in the above passage. Place a tick (right mark) against the correct answer:-

51. Athens is significant for the students of Greek political thought mainly because :-

(a) It was the most powerful of the Greek City- States ;
(b) Its ideals had been carefully studied by the Greeks themselves ;
(c) It had the most ideal form of Government ;
(d) it is the best known of the Greak City - States ;

52. Greek political thought was concerned with problems :-

(a) Entirely unrelated to,
(b) Identical with,
(c) different from analogous but to,

53. The moral and religious basis of Greek political idea is :

(a) very similar to modern moral and religious ideas,
(b) unknown,
(c) very different from modern moral and religious ideas.

54. It is :

(a) easy,
(b) not at all easy,
(c) Impossible,
for a modern man to imagine what life was like in a Greek City-State.

55. In comparison with the ancient Greek City States are :

(a) very large,
(b) very small,
(c) about the same size.

56. The population of an ancient Greek City States was :

(a) much less than 300,000
(b) over 3 million
(c) just over 300,000

57. The City-State of Athens comprises :

(a) a small territory governed by a single city,
(b) a large territory governed by a number of cities,
(c) a small territory with village councils,
(d) a large territory with a decentralised administration.

58. At different times in the history of the world people :

(a) have thought in basically the same way,
(b) have thought in different ways,
(c) have contradicted the views of people of the previous generation.

59. Details of political theory are derived from Greek Political thought :

(a) because the Greek City States was very similar to modern states,
(b) in spite of Greek City State being very different from modern States,
(c) because modern political theorists are students of Greek Philosophy.

60. The meaning of political ideal at the particular moment in European History since the time of the Greeks can be defined only be :

(a) relating it to its context,
(b) tracing it back to its original meaning among the Greeks,
(c) investigating the meaning of the Greek work for it,
(d) taking into account only those features in it which have persisted throughout its history.

61. Write sentences using each of the following words so as to bring out its meaning clearly :-
Arbitration, emoluments, etiquette, consolidate, hypothetical, retrospective, exigencies, evaluate, review, empower.

**Either**

62. Write a letter to the Head of an Educational Institute in an English Speaking country, setting out the following information in an orderly manner :-

(i) The equivalence of our examination certificate to the certificate specified in this letter cannot be determined as the examining authorities in Sri Lanka have not been consulted by the institution concerned in that country.
(ii) The G. C. E. (Ordinary Level) Credit Pass has been officially equated with an Ordinary Pass in London G. C. E. (Ordinary Level) .
(iii) The receipt of the letter sent to the Commissioner of Examinations is acknowledged.
(iv) Any further information in this matter may be obtained from the embassy of the Republic of Sri Lanka in that Country.

63. Write a memorandum to the Secretary, Bureau of Standards marking out a case for the adoption of the 24 hour clock in this country stating the advantages of such a measure.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**

*இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும்*
*இரண்டாம் மொழி பற்றிய பரீட்சையும் - 2010*

EFFICIENCY BAR EXAMINATION AND SECOND LANGUAGE TEST FOR THE SRI LANKA ACCOUNTANTS SERVICE - 2010

திணைக்களத் தலைவர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

அலுவலர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

*சிங்களம் -2*
*தமிழ் -3*
*ஆங்கிலம் -4*
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

(பரீட்சையின் பெயர் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.)

1. (அ) (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ii) முதல் எழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு முதல் எழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்- உதாரணம் : SUNIL, A.B)

(ஆ) (i) முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ii) முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2. அலுவலக முகவரி (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அனுப்பப்படும்):----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.

3. அலுவலர் விண்ணப்பிக்கும் பரீட்சை :----.
**குறிப்பு**.- இதனை நிரப்புவதற்கு முன் 4 (ஆ) பார்க்கவும்.

4. (i) அலுவலர் எச்சேவையைச் சேர்ந்தவர் :----.
(ii) அந்தச் சேவையில் நியமனம் செய்யப்பட்ட திகதி :

ஆண்டு: | | | | | மாதம் : | | | திகதி : | | |

5. அறிவித்தலின் முதலாம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பாட இலக்கங்களுடன் விண்ணப்பிக்கும் பாடங்கள் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கு மேலதிகமாக வேறு பாடங்களுக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது).

(i) பாட இலக்கம் | | |
(ii) பாட இலக்கம் | | |
(iii) பாட இலக்கம் | | |
(iv) பாட இலக்கம் | | |
(v) பாட இலக்கம் | | |
(vi) பாட இலக்கம் | | |
(vii) பாட இலக்கம் | | |

6. பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

7. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :- | | | | | | | | | | |

8. பதவி :----.

9. இலங்கை கணக்காளர் சேவைக்கு நியமனம் செய்யப்பட்ட திகதி :----.

10. இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தரினால் விண்ணப்பிக்கப்படும் பரீட்சை :-

(அ) முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (01) :----.
(ஆ) இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (02) :----.
(இ) இரண்டாம் மொழிப் பரீட்சை (03):----.

11. இதற்கு முன் இப்பரீட்சைக்கு முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடவும். ஆம் எனில் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் குறிப்பிடவும் :----.

| பரீட்சை | பாடம் | வருடம் | மாதம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் இந்த விண்ணப்பப்படிவத்தில் மேலே வலது மூலையில் காண்பிக்கப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையவர் என்றும் நான் உறுதிமொழிகிறேன்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்ட முத்திரைகள் என்னால் பெறுமதி நீக்கம் செய்யப்படமுன் செல்லுபடியானதும் பாவிக்கப்படாதவையுமென்றும் உறுதிமொழிகிறேன். மேலும் பரீட்சை நடத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு நான் இணங்குகிறேன்.

12. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் ரூபா :- | |

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

முன்னிலைப்படுத்தப்படுகிறது.

இதில் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி ........................................................ இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கும், இந்த விண்ணப்பப்படிவத்தில் மேலே வலது மூலையில் அவரால் காண்பிக்கப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் தகைமையுடையவர்.

பரீட்சார்த்தியின் கையொப்பத்தை சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவியும்.

திகதி :----.

4-296

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.